சுருக்கம்

2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிறித்துவர்களில் தொழிற்கல்வி பயின்றவர்களுக்கும் தொழில் செய்து பிழைக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் இலவசத் தொழிற் கருவிகள் வழங்குதல் – ஆணை-வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5)துறை

அரசாணை(நிலை)எண்.58 நாள் 31. 5.2007

படிக்க:

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண். ஆ2/46031/06, நாள் 24.4.2007 மற்றும் கடித நாள் 18.5.2007

---

**ஆணை**

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவர்களில் தொழிற்கல்வி பயின்றவர்களுக்கும் தொழில் செய்து பிழைக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் இலவசத் தொழிற் கருவிகள் வழங்குவதற்கான திட்டம் நடைமுறையில் இருந்தது. பின்னர், இத்திட்டம் குடும்பக் கல்வித் திட்டமாக மாற்றப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து சில ஆண்டுகளாகத் தொழில் செய்து பிழைக்கத் தொழிற் கருவிகள் வழங்கும்படி கேட்டு அரசுக்கு மிகுதியான விண்ணப்பங்கள் தொடர்ந்து வரலாயின.

2. 2007-2008 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் வழங்க ரூ 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நல இயக்குநர், தனது முன்மொழிவில் தொழிற்கருவிகளான தையல் இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள் மற்றும் தச்சுக் கருவிகள் வாங்கி வழங்க ரூ 100.00 இலட்சத்தினை வழங்குமாறு அரசைக் கேட்டுள்ளார். இக்கோரிக்கையினை அரசு கவனமாக ஆராய்ந்து இக்கோரிக்கையை ஏற்கலாம் என முடிவெடுத்து தொழிற்கருவிகள் வாங்கி வழங்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு ரூ 100.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. இந்த ஆணையின் பிற்சேர்க்கையில் ( Annexure ) குறிப்பிட்டுள்ளபடி, தொழிற்கருவிகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. முன்பக்கம் பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01– ஆதி திராவிடர் நலன்– 800 ஏனைய செலவு 11ம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநில திட்டம் - JB தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி உதவி - II உதவித் தொகைகள் - 01 தனித் திட்ட உதவித் தொகை - த தொ. கு எண். 2225 01 800 JB 1113)

4. ஆதி திராவிடர் நல இயக்குநர் இத்தொகையைப் பெற்றுத் தொழிற்கருவிகளைத் திறந்த ஒப்பந்தப்புள்ளி ( Open Tender System) மூலம் விளம்பரம் கொடுத்து வாங்கி வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

5. .இவ்வாணை நிதித் துறையின் (அ.சாகு..எண். 32122./ஆதி & ப.ந/ 07 நாள் 29.5.2007 ) இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

பு.ஏ. இராமையா,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5,
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/6/35
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5,

<u>நகல்</u>

ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
ஆதி(ம) பந(ஆதிந6/கமப/சிஉதி துறை , (அநமு1) துறை,செ–9
நிதி(ஆதி& ப.ந) மற்றும் நிதி(வ.செ.பொ.2)துறை.சென்னை–9
இருப்புக்கோப்பு/ உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 58, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. நாள் 31.5.2007

பிற்சேர்க்கை
(Annexure )

இந்த ஆணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ 100.00 இலட்சங்களை பின்வரும் தொழிற்கருவிகளை வாங்கி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

| வ.எண். | தொழிற்கருவி | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒரு கருவிக்கு ஆகும் தொகை | மொத்த தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தையல் இயந்திரம் | 3100 | ரூ 2500/- | :ரு 77.50 |
| 2 | இஸ்திரி பெட்டி | 1200 | ரூ 1500/- | ரூ 18.00 |
| 3 | தச்சு கருவிகள் ( Carpentary tools) ITI சான்று பெற்றவர்களுக்கு) | 225 | ரூ 2000/- | :ரு 4.50 |
| | (மொத்தம் ரூபாய் நூறு இலட்சங்கள் மட்டும்) | | | ரூ 100.00 |

பு.ஏ. இராமையா,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்(ஆதிந5) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை—9

<u>கடித எண். 13138/ஆதிந5/2007 -3 நாள் 9.8.2007</u>

அனுப்புநர்
திரு. சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப.,
அரசு செயலர்.

பெறுநர்.
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை—5,
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை—101
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை—18/6/35
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—5.

ஐயா,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - 2007 – 2008ம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்குதல் – அரசாணை (நிலை) எண். 58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை, நாள். 31.5.2007 - திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை, நாள். 31.5.2007.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநர் நே.மு.க.எண். ஆ2/46031/06 நாள். 14.6.2007.

————

2007– 2008ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவர்களுக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்குவதற்காக ரூ. 100 இலட்சம் அனுமதி வழங்கிய அரசாணை (நிலை) எண். 58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை நாள். 31.5.2007க்குக் கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

....த.பி.பா

## திருத்தம்

அரசாணை (நிலை) எண். 58, ஆதி(ம)பந (ஆதிந5) துறை நாள். 31.5.07 ல் பத்தி 4க்கு பதில் கீழ்க்கண்டவாறு படிக்கவும்;-

4. " மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையான ரூ. 100.00 இலட்சத்தில், தலா ரூ 2500 வீதம் 3100 பயனாளிகளுக்கு 77.50 இலட்சம் செலவில் தையல் இயந்திரங்களும், தலா ரூ 1500 வீதம் 1200 பயனாளிகளுக்கு ரூ 18.00 இலட்சம் செலவில் இஸ்திரி பெட்டியும், தலா ரூ 2000 வீதம் 225 பயனாளிகளுக்கு ரூ 4.5 இலட்சம் செலவில் தச்சுக் கருவிகளும் வாங்க தகுதியுடைய விண்ணப்பங்களின் அடிப்படையில் மாவட்ட வாரியாக நிதியை அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்து அளிக்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது. அப்படி வழங்கப்பட்ட தொகையிலிருந்து மேற்படி தொழிற்கருவிகளை வாங்கும்போது சமூக நலத்துறையில் பின்பற்றுவது போல அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தையல் இயந்திரங்களை உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அவற்றை வாங்கி வழங்கிடவேண்டும் என்றும் இஸ்திரி பெட்டி மற்றும் தொழிற்கருவிகள் வாங்குவதற்கு வழக்கமான நடைமுறையைப் பின்பற்றி வாங்கி வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இலவச தொழிற்கருவிகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்தபின்னர் ஒரு விவரமான அறிக்கையை ஆதிதிராவிடர்நல இயக்குநர் வழியாக அரசுக்கு அனுப்பவும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண். 2516/FS/P/2007 நாள். 7.8.2007 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலருக்காக

நகல்;

ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்நேர்முக உதவியாளர் சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் அவர்களின் தனிச்செயலர், சென்னை–9
ஆதி(ம) பந(ஆதிந6/கமப/சிஉதி துறை , (அநமு1) துறை,சென்னை–9
நிதி(ஆதி& ப.ந) மற்றும் நிதி(வ.செ.பொ.2)துறை,சென்னை–9
இருப்புக்கோப்பு/ உதிரி